بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# Friday Sermon 07/08/2015

**(21 SHAWWAL 1436 HIJRI)**

## FINANCE MANAGEMENT

# நிதி மேலாண்மை

**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

உலக மக்களுக்கு சலாம் கூறிக் கொண்டு தஷஹ்ஹுதும் தஅவுசும் அல்பாத்திஹாவும் ஓதியப் பிறகு **ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அ)** இவ்வாறு கூறிக் கொள்ள ஆரம்பித்தார்.

பணம் சம்பாதித்துக் கொள்தல் என்பது மிக எளிதான விஷயமல்ல. குறிப்பாக சட்டத்திற்கு உட்பெட்டவார் பணம் சம்பாதித்துக் கொள்தல் என்பது! நிச்சயமாக பணம் சம்பாதித்தல் என்பது மிக வருத்தம் விளைவிக்கின்ற விஷயமாகும். நாம் சாதாரணமாக கேட்கின்ற ஒரு சொல் **"ஒருவருக்கு தனது உணவுக்காக கடினமான உழைப்பை மேற் கொள்ள வேண்டும்".** ஆகாயங்களையும் பூமியையும் படைத்த அல்லாஹ், அவனது அருள் நிறைந்த நூல் வழியாக நமக்கு கட்டளையளித்திருக்கின்றான்.

**"அவனே உங்களுக்கு இப்பூமியை வசதியாக ஆக்கினான். ஆகவே, அதன் பல வழிகளிலும் நடந்து அவனுடைய உணவிலிருந்து புசியுங்கள். இன்னும் அவனிடமே உயிர்த் தெழ வேண்டியிருக்கின்றது". (67-16)**

பல்வகையானதும் மிக அதிகமானதும் ஆன அருள்களும் வழங்கிக் கொள்பவன் அல்லாஹ்வே ஆவான். விண்ணுலகிலும் மண்ணுலகிலும் காண்பதனைத்தும் அவனுடையதேயாகும். ஆகவே மனிதன் உணர்ந்துக் கொள்ள வேண்டும், தனது அனைத்து செயல்களும் செய்துக் கொள்வது தாமாகயிருந்தாலும் தனது கைவசமிருப்பவையாவும் உண்மையில் அல்லாஹ்வுடையதேயாகும். அனைத்து விஷயங்கள் மீதும் அல்லாஹ்வுக்கு அதிகாரமுண்டு. மனிதனும் அவனுக்கு உரிமையானதுமானயாவும் அல்லாஹ்வுடையதாகும். மனிதனின் கையிலிருகக்கின்ற பொருள்களுடையவும், செல்வங்களுடையவும் உண்மையான உரிமையாளர் மனிதனல்ல மாறாக அல்லாஹ்வே ஆவான். இந்த உண்மையினை அல்லாஹ் அவனது மஹத்துவம் வாய்ந்த நூல் வழியாக விளக்கியுள்ளான்.

**"அல்லாஹ் உங்களுக்குத் தந்திருக்கும் பொருளிலிருந்து அவர்களுக்கு கொடுப்பீர்களாக" (24-34)**

விஷயம் இவ்வாறு இருப்பதால் மனிதன் தனது நிதியினை எவ்வாறு செலவு செய்ய வேண்டுமென்பதில் மிக கவனமுடையவனாகயிருக்க வேண்டும். அதைக் குறித்து மிக நல்ல முறையிலான வழியினை, மனித குலத்திற்கு நல் வழிகாட்டிடும் பரிசுத்த குர் ஆன் வழங்கியிருப்பதை பாருங்கள்.

**“அவர்கள் சிலவு செய்தால் வீண் விரையம் செய்ய மாட்டார்கள் (உலோபித்தனமாகக்) குறைக்கவும் மாட்டார்கள் எனினும் இரண்டுக்கும் மத்திய நிலையாக இருப்பார்கள்”. (25-68).** ஒரு நம்பிக்கையாளர் அமிதமான செலவு செய்பவனாக இருக்க கூடாது. என்பதை போன்றே உலோபித்தனமாகயிருக்கவும் கூடாது. இரண்டுக்கும் மத்தியிலான நிலையினை கைக் கொண்டிட வேண்டும்.

சந்தேகமின்றி கூறாலாம், பணம் என்பது ஒரு பெரிய சோதனையாகும். அல்லது ஒரு பெரிய வசீகரிப்பு பொருளாகும். ஒரு நபருக்கு பணம் அதிகரித்துக் கொள்ளும் பொழுது அந்நபர் தேவையற்ற செலவுகள் செய்துக் கொள்ள ஆயத்தமாகின்றார். உதாரணமாக ஒரு நபர் அவர் நாடும் நேரம் அவர் நாடுகின்றவயை வாங்கிக் கொள்கின்றார். ஆனால் அவர் செலவு செய்ததன் மூலமாக கிடைத்த பயனும் பலனும் என்னவென்று சிந்திப்பதில்லை. சில வேளை தவறான வழிகள் மூலமாக நிதியினை பல்மடங்கு அதிகரிப்பதற்கான வழிமுறைகளை அவர் மேற்கொள்கின்றார்கள். அல்லது சூதாட்டத்தில் மற்றும் பங்கு சேர்ந்து தனது நிதியினை இழந்து விடுகின்றார். இம்மையிலும் நாளை மறுமையிலும் எதிர்க் கொள்ளுகின்ற இழப்புகளைக் குறித்து அவர் யோசிப்பதில்லை. அவர்கள் சில வேளை இந்த பொருள்களை எவ்வித பயனுமில்லாத விஷயங்களுக்காக வினியோகிக்கின்றனர். உதாரணமாக மது அருந்துதல், சிக்ரட், சினிமா கொண்டாட்டம் போன்றவை! சில நேரம் அவரது பொருள் அவரை அவமானத்திற்கு ஆளாக்குகின்ற வகையில் அவரை கஞ்சனாக பரிணமிக்க செய்கின்றது. தனது பொருளை மற்றவர்களுடன் பாகம் வைப்பதற்கு அவர்கள் விரும்புவதில்லை. அதாவது இந்த பொருளிலிருந்து ஏழைகளுக்கு உதவியளிப்பதில்லை. ஒரு பள்ளி வாசல் அமைத்துக் கொள்ள நன் கொடை வழங்குவதில்லை. ஜமாஅத்தின் திட்டங்களுக்காகவோ அல்லது அநாதைகளின் பாதுகாப்பிற்காக மனைகள் அமைத்திடவோ செலவு செய்வதில்லை. இவ்வகை விஷயங்களுக்காக செலவு செய்தால் தங்களின் பொருள்கள் குறைந்து விடுமோ என அவர்கள் அஞ்சுகின்றனர். மட்டுமின்றி தனது மனைவியுடையவும், குழந்தைகளுடையவும், பொற்றோர்களுடையவும், சகோதர-சகோதரிகளுடையவும் உரிமைகளைக் கூட வழங்குவதில்லை. நபி அரசன் (ஸல்) வின் ஒரு அற்புத மொழியினை அவர்கள் அறிந்திருந்திருப்பின்……. ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்.

**“அல்லாஹ்வின் வழியில் ஒரு தினார் நீங்கள் செலவு செய்தால் அதாவது அடிமையை மீட்பதற்காக செலவு செய்தால், தேவையாளருக்கு உதவியாக வழங்கினால் அதாவது தனது குடுபத்தின் பாதுகாப்பிற்காக அளித்தால் (எல்லாம் நன்கேயாகும்) ஆனால் தனது குடும்பத்திற்காக செலவு செய்து கொண்டதற்கே அவருக்கு மிக பெரிதான பிரதிபலன் கிடைப்பது”**(மூஸ்லீம்).

இதிலிருந்து புரிந்துக் கொள்கின்ற ஒரு உண்மை, ஒரு நம்பிக்கையாளர் தனது பொருளை வினியோகிக்கின்ற விஷயத்தில் மிக கவனமுடையவனாகயிருக்க வேண்டும் என்பதாகும். அவர்களுக்கு ஏராளமாக அளித்துள்ள செல்வங்களிலிருந்து தங்களின் குடும்பத்தை சார்ந்த உறுப்பினர்களை விலக்கிக் கொள்ளக் கூடாது. முற்றிலும் சிறந்த

தானதர்மங்கள் குடும்பத்திலிருந்தே ஆரம்பித்துக் கொள்ள வேண்டியது. எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்பதை குறித்து அவர்கள் நன்கு உணர்ந்துக் கொள்ள வேண்டியதோடு, எப்போது செலவு செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும், எதற்காக செலவு செய்ய வேண்டியது என்பதைக் குறித்தும் அவர்கள் புரிந்திருக்க வேண்டும். என்று மட்டுமல்லாமல் தனது வாழ்கையின் இறுதி கட்டத்தில் எதிர்க் கொள்ளுகின்ற வருத்தமான சூழ்நிலைகளில் செலவு செய்வதற்கு தேவையான செல்வங்களை பாதுக் காத்துக் வைப்பது எவ்வாறு என்பதை அவர்கள் தெரிந்திருக்கவும் வேண்டும். காரணம் வாழ்க்கையில் உயர்வும் தாழ்வும் நிகழ்ந்திடலாம். தங்களின் செல்வங்களை செலவு செய்யும் பொழுது அதாவது தங்களின் சிறிதளவிலான பொருள்களை தேவைக்குட்பட்ட முறையில் வினியோகிக்கும் பொழுது அல்லாஹ் அவனது நபிமார்களுக்கு வழங்கிய பரிசுகளின் உரிமையாளராக உங்களை மாற்றுகின்றான். ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு சர்ஜாஸ் (ரலி) அவர்கள் விளக்குகின்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்.

**“நல்ல முறையிலான ஒரு விஷயம் செய்யும் பொழுது, திடமான சிந்தனை மூலமாக அதை செய்தால், எளிமையுடன் அதை முழுமைப்படுத்திக் கொண்டால் அது நபித்துவத்தின் இருபத்தி நான்கு சதவீதம் ஆகின்றது என உட்கொள்ளுங்கள்”** ( திர்மிதி)

வேறொரு நபி மொழியில் காணலாம். ஹஸ்ரத் ரசூல் கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**“நல்ல முறையிலான ஒரு செயல் நல்ல முறையில் செய்தால், உறுதி வாய்ந்த யோசனைகள் மூலமாக அதை நிறைவுப்படுத்தி கொண்டால் அது நபித்துவத்தின் இருபத்தி ஐந்து சதவீதம் ஆகின்றது”.** (அபூதாவூத்).

நமது பொருள்களை நல்ல முறையில் வினியோகித்து கொள்வதற்கான ஆற்றல் அல்லாஹ் நமக்கு வழங்குவனாக! இறை வழியில் செலவு செய்திட எவ்வித மனத்தடு மாற்றமும் நிகழாமல் இருக்கட்டும். அல்லாஹ்வின் வழியில் நாம் செலவு செய்திடும் செல்வங்கள் ஒரு பொழுதும் வீணாகுவதில்லை. நம் செயல்களுக்கான பிரதிபலன் நமக்கு கிடைப்பதேயாகும். நிதி மேலாண்மை என்பதும், அல்லாஹ் தேர்ந்தெடுக்கின்றோர்களுக்கு தவிர்த்துக் கொள்ள முடியாத விஷயமாகும். இன்று இறையடையாளங்களுடன் நிலை நிற்கும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த நம்மை, இறைவனே தேர்ந்தெடுத்ததாகும் என நாம் கூறிக் கொள்ளும் போது, நமது நோக்கவும் செயல்களும் களங்கமற்ற உள்ளத்தோடு அல்லாஹ்வின் திருப்தியினை மட்டும் நாடுகின்ற நிலையில் பிரதிப்பலித்துக் கொள்ள வேண்டும் என்பதை மறவாதீர்கள். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Issued by:**

Jamaat Ul Sahih Al Islam

*Dawa Department*

Tamil Nadu (Regd. No. A/693)

**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

**Azim Ahmad**

Sadr Sahib'ul Faraj

Kerala/Tamil Nadu

**E-Mail:** azimahmad070@gmail.com

**Cell:** 9947181650; 9789180817